P.L.RAJ IAS & IPS ACADEMY
Building Bureaucrats Since 2006

November 1, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழ்நாடு நாள்

(i) தமிழ்நாடு நாள் அறிவிப்பு

- முதலமைச்சர் எஸ். ஜோசப் விஜய் தலைமையிலான தமிழ்நாடு அரசு, ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 1-ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும் என அறிவித்துள்ளது.
- 1956-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் தேதி, மொழிவாரியாக இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும்.

முந்தைய அரசுகளின் கொள்கை மாற்றங்கள்:

- 2019: எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான அதிமுக அரசு, நவம்பர் 1-ஆம் தேதியை முதன்முதலில் தமிழ்நாடு நாளாக அறிவித்தது.
- 2021: மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, தமிழ்நாடு நாள் கொண்டாடும் தேதியை ஜூலை 18-ஆம் தேதிக்கு மாற்றியது. 1967-ஆம் ஆண்டு இதே நாளில்தான், அப்போதைய முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை, 'மெட்ராஸ் மாநிலம்' என்ற பெயரை 'தமிழ்நாடு' என மாற்றுவதற்கான தீர்மானத்தைச் சட்டப்பேரவையில் நிறைவேற்றினார்.
- தற்போதைய நிலை: தமிழக வெற்றிக் கழக (TVK) அரசு, நவம்பர் 1-ஆம் தேதியை அதிகாரப்பூர்வ தமிழ்நாடு நாளாகக் கொண்டாடத் தேர்வு செய்துள்ளது.

(ii) தொடக்ககாலப் போராட்டங்களும் 'தமிழ்நாடு' என்ற பெயரின் தோற்றமும்

- 1938-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு மாநாடு: சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற மாநாட்டில் மறைமலை அடிகள், தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி, சோமசுந்தர பாரதியார் ஆகியோர் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தை முன்வைத்தனர்.
- இதே காலகட்டத்தில், மா. பொ. சிவஞானம் (சிலம்புச் செல்வர்), தனி 'தமிழ் மாநிலம்' அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திப் பல மாநாடுகளை நடத்தினார்.

(iii) மொழிவாரி மாநில மறுசீரமைப்பு (1948–1956)

- எஸ். கே. தார் ஆணையம் (1948): மொழிவாரி மாநிலங்களை உருவாக்குவது

குறித்து ஆய்வு செய்ய, 1948 ஜூன் மாதத்தில் மத்திய அரசு எஸ். கே. தார் தலைமையில் குழுவை அமைத்தது. இக்குழு மொழிவாரி மாநிலப் பிரிவினைக்கு எதிராகப் பரிந்துரைத்தது. நிர்வாக வசதிகளின் அடிப்படையில் மட்டுமே மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. பிரதமர் ஜவாஹர்லால் நேரு உள்ளிட்ட தலைவர்களும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்தனர்.

- மொழிவாரி மாநிலங்களுக்கான மக்கள் போராட்டங்கள்: இதையடுத்து, விசால ஆந்திரா, அகண்ட கர்நாடகம், ஐக்கிய கேரளம், சம்யுக்த மகாராஷ்டிரம், மகா குஜராத் உள்ளிட்ட மொழிவாரி மாநிலக் கோரிக்கைகள் நாடு முழுவதும் வலுப்பெற்றன.
- பொட்டி ஸ்ரீராமுலுவின் தியாகம்: தனி ஆந்திர மாநிலம் அமைக்க வலியுறுத்தி, 1952 ஜூன் 9-ஆம் தேதி உண்ணாவிரதத்தைத் தொடங்கிய பொட்டி ஸ்ரீராமுலு, 56 நாள்கள் உண்ணாவிரதம் இருந்த பின்னர் 1952 டிசம்பர் 15-ஆம் தேதி உயிரிழந்தார். இதையடுத்து ஏற்பட்ட வன்முறைப் போராட்டங்கள் மத்திய அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தின. அதன் விளைவாக, 1953 அக்டோபர் 1-ஆம் தேதி ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டது.
- மாநில மறுசீரமைப்புச் சட்டம் (1956): மாநில மறுசீரமைப்புச் சட்டத்துக்கு 1956 ஆகஸ்ட் 31-ஆம் தேதி குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்தது. இச்சட்டம் 1956 நவம்பர் 1-ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது.

மாநில எல்லைகளில் செய்யப்பட்ட மாற்றங்கள்:

- மெட்ராஸ் மாநிலத்துடன் இணைக்கப்பட்ட பகுதிகள்: திருவிதாங்கூர்–கொச்சி மாநிலத்திலிருந்த அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தெற்குத் தாலுகைகள் இணைக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டம் உருவாக்கப்பட்டது. செங்கோட்டைத் தாலுகை திருநெல்வேலி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.
- மெட்ராஸ் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்ட பகுதிகள்: மலபார் பகுதி கேரளத்துடன் இணைக்கப்பட்டது. கன்னட மொழி பேசும் பகுதிகள் மைசூர் மாநிலத்துடன் இணைக்கப்பட்டன.

(iv) சங்கரலிங்கனாரின் தியாகம் (1956)

- பிற மாநிலங்கள் தங்களுக்கான விரும்பிய பெயர்களைப் பெறும் சூழலில், மெட்ராஸ் மாநிலம் தொடர்ந்து அதே பெயரிலேயே அழைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது.

- விருதுநகரைச் சேர்ந்த சங்கரலிங்கனார், மெட்ராஸ் மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, 1956 ஜூலை 27-ஆம் தேதி காலவரையற்ற உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.
- 76 நாள்கள் உண்ணாவிரதம் இருந்த பின்னர் அவர் உயிரிழந்தார். அவரது தியாகம், மாநிலத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கைக்கு மக்களிடையே பெரும் ஆதரவை ஏற்படுத்தியது.

(v) சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றப் போராட்டங்கள் (1957–1964)

- 1957: 1957-ஆம் ஆண்டு சட்டப்பேரவைக்குள் நுழைந்த திமுக, மெட்ராஸ் மாநிலத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றுவதற்கான தீர்மானத்தைக் கொண்டுவந்தது. ஆனால், 1957 மே 7-ஆம் தேதி நடைபெற்ற வாக்கெடுப்பில் 42 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 127 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்ததால் தீர்மானம் தோல்வியடைந்தது.
- 1961: சோஷலிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் பி. சின்னதுரை, 1961 ஜனவரி மாதத்தில் பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். முதலமைச்சர் கே. காமராஜர் விவாதத்தைப் பிப்ரவரி மாதத்துக்கு ஒத்திவைத்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் மூன்று நாள்கள் சட்டப்பேரவையைப் புறக்கணித்தன. பின்னர், அரசு நிர்வாகத் தொடர்புகளில் 'தமிழ்நாடு' என்ற பெயரைப் பயன்படுத்த காமராஜர் ஒப்புக்கொண்டார்.
- மாநிலங்களவை முயற்சிகள்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பூபேஷ் குப்தா, 1961-ஆம் ஆண்டு மாநிலங்களவையில் பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அதேபோல், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் ராம. அரங்கண்ணல், 1964-ஆம் ஆண்டு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். இந்த இரு முயற்சிகளும் தோல்வியடைந்தன.

(vi) வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமும் அதிகாரப்பூர்வ பெயர் மாற்றமும் (1967–1969)

- 1967 ஜூலை 18: முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை தலைமையிலான திமுக அரசு, மெட்ராஸ் மாநிலத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றுவதற்கான அதிகாரப்பூர்வத் தீர்மானத்தைச் சட்டப்பேரவையில் கொண்டுவந்தது. இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- 1968 நவம்பர் 23: 'தமிழ்நாடு பெயர் மாற்றச் சட்ட மசோதா' நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

- 1969 ஜனவரி 14: மெட்ராஸ் மாநிலம் அதிகாரப்பூர்வமாக 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

(vii) நவம்பர் 1 அல்லது ஜூலை 18: விவாதத்தின் பின்னணி

- பல தமிழ் அறிஞர்களும் அரசியல் அமைப்புகளும் நவம்பர் 1-ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.
- அவர்களின் கருத்துப்படி, நவம்பர் 1 என்பது மொழிவாரி மாநில மறுசீரமைப்பின்போது எல்லைப் பகுதிகள் பிரிக்கப்பட்டு, சில பகுதிகள் பிற மாநிலங்களுடன் இணைக்கப்பட்ட நாளாகும்.
- அதற்கு மாறாக, ஜூலை 18 என்பது அண்ணாதுரை தலைமையில் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 'தமிழ்நாடு' என்ற பெயரை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கான வரலாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நாளாகும்.
- இவ்விரு தேதிகள் குறித்த மாறுபட்ட கருத்துகள் இருந்தபோதிலும், தற்போதைய தமிழக அரசு நவம்பர் 1-ஆம் தேதியை ஆண்டுதோறும் அதிகாரப்பூர்வமாகக் கொண்டாடப்படும் தமிழ்நாடு நாளாக அறிவித்துள்ளது.

2. வங்கக் கடலில் ஞாயிற்றுக்கிழமை (நவ. 1) புயல் உருவாக வாய்ப்புள்ளதாகவும், அதற்கு இந்தியா சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட தமிழ்ச் சொல்லான 'முரசு' எனப் பெயரிடப்படும் என்றும் வானிலை ஆய்வு மைய தென்மண்டலத் தலைவர் வீ.ஆர்.துரை தெரிவித்துள்ளார்.

i. தமிழகத்தில் நிகழாண்டு வடகிழக் குப்பருமழை கடந்த அக். 15-ஆம் தேதி தொடங்கியது. நிகழாண்டின் முதலாவது புயலான 'அர்னாப்' கடந்த அக். 26-ஆம் தேதி உருவானது.

3. வங்கதேசத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், கடந்த செப்டம்பர், அக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் 321 பேர் உயிரிழந்துள்ளனர்.

i. நடப்பாண்டில் இதுவரை 1.33 லட்சத்துக்கும் அதிகமானோர் டெங்கு பாதிப்பால் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், டிசம்பருக்கு முன்பாக இதன் தாக்கம் குறைய வாய்ப்பில்லை என மருத்துவ வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ii. வங்கதேச சுகாதாரத் துறை தரவுகளின்படி, நடப்பாண்டில் இதுவரை டெங்கு பாதிப்பால் 418 பேர் உயரிழந்துள்ளனர். கடந்த செப்டம்பரில் 148 பேர் உயிரிழந்த நிலையில், அக்டோபரில் அந்த எண்ணிக்கை 173-ஆக அதிகரித்துள்ளது. இதுதவிர, தட்டம்மை நோயாலும் அங்கு இதுவரை 1,200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதால், அந்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு கடும் நெருக்கடியைச் சந்தித்து வருகிறது.

iii. காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் நோயின் தீவிரம் அதிகரித்த பிறகே மருத்துவமனைகளை நாடுவதாக மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். குறிப்பாக, ரத்த அழுத்தம், ஆக்சிஜன் அளவு மிகவும் குறைந்த நிலையில், அபாய கட்டத்தில்தான் பெரும்பாலான நோயாளிகள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், ஏற்கெனவே டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படும் போது, அதன் வீரியம் மற்றும் உயிரிழப்பு அபாயம் அதிகமாக இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

iv. பருவநிலை மாற்றம் காரணமாக மழைப்பொழிவு, காற்றில் ஈரப்பதம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளால், ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால், நவம்பர் மாதம் முழுவதும் டெங்கு பரவலின் தாக்கம் தொடரும் என்றும், டிசம்பர் மாதத்திலேயே இதில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்படும் என்றும் பூச்சியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

v. தற்போது வங்கதேசத்தில் டெங்கு தீநுண்மியின் 4 மரபணு வகைகளும் பரவி வருவதால், இதுவரை பயன்பாட்டுக்கு வராத டெங்கு தடுப்பூசியை நீண்டகாலத் தீர்வாக அறிமுகப்படுத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

4. ரஷியாவுடன் போரில் ஈடுபட்டுள்ள உக்ரைனுக்கு சுமார் 210 கோடி டாலர் மதிப்பிலான 500 'பிஏசி-3' ரக 'பேட்ரியாட்' வான் பாதுகாப்பு ஏவுகணைகளை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

i. ரஷியாவின் 'பாலிஸ்டிக்' ஏவுகணைத் தாக்குதல்களை முறியடிக்கத் தேவையான இந்த ஏவுகணைகளை வழங்குவதில் அமெரிக்க பாதுகாப்புத் துறை தேவையற்ற தாமதம் செய்வதாக உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், இம்முடிவு

எட்டப்பட்டுள்ளது.

ii. கனடா, ஜெர்மனி, நார்வே ஆகிய நாடுகளின் நிதி பங்களிப்புடன் உக்ரைனுக்காக 500 'பிஏசி-3' ரக 'பேட்ரியாட்' ஏவுகணைகள் விற்கப்படுவதாகவும், இதில் அமெரிக்காவின் சொந்த நிதி எதுவும் ஈடு டுத்தப்படவில்லை எனவும் அமெரிக்க வெளியுறவுத் துறை தெளிவுபடுத்தியுள்ளது.

5. ஆப்பிரிக்க நாடான காங்கோ குடியரசில் வேகமாகப் பரவி வரும் எபோலா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5,000-ஐ கடந்துள்ளது.

i. இத்தொற்றால் இதுவரை 10,351 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 5,026 பேர் இறந்துள்ளனர். ஏறக்குறைய 50 சதவீத இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ள இந்த நோய், பிற ஆப்பிரிக்க நாடுகளிலும் பரவி வருவதால் பெரும் அச்சம் எழுந்துள்ளது.

ii. கடந்த மே மாத மத்தியில் 'புண்டிபுக்யோ' வகை தீநுண்மி மூலம் தொடங்கிய இப்பரவல், உலக வரலாற்றில் 2-ஆவது மிகப் பெரிய பாதிப்பாக உருவெடுத்துள்ளது.

6. ஆங்கில கால்வாயில் சிறிய படகுகள் மூலம் அகதிகள் ஆபத்தான முறையில் சட்டவிரோதமாக நுழைவதைத் தடுக்கும் வகையில், இந்தியர்கள் உள்பட பல்வேறு நாட்டு அகதிகள் பிரிட்டனில் குடியேற புதிய பாதுகாப்பான மற்றும் சட்டபூர்வமான வழிமுறையை அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

i. பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இதுகுறித்து பேசிய எல்லைப் பாதுகாப்பு, அகதிகள் விவகாரத் துறை அமைச்சர் அன்னா டர்லி, 'இப்புதிய பதிட்டம் முதல்கட்டமாக இந்தியா, வங்கதேசம், எகிப்து, கென்யா, மலேசியா, பாகிஸ்தான், உகாண்டா ஆகிய 7 நாட்டவர்களுக்குச் செயல்படுத்தப்படும்' என்று அறிவித்தார்.

ii. இப்புதிய திட்டத்தின்கீழ் தேர்வாக, அகதிகள் தங்கள் சொந்த நாட்டுக்கு வெளியே இருக்க வேண்டும் என்பதுடன், அக். 1-க்கு முன்பு ஐ.நா. அகதிகள் ஆணையத்திலோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமோ தங்களைப் பதிவு செய்திருக்க வேண்டும் என்பது தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் அகதிகளின் வருகை அடுத்தாண்டு இலையுதிர் காலத்தில் (மார்ச்) தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. இந்திய பாதுகாப்புப் படைகளுக்காக பிரத்யேக ஏ.ஐ.கருவிகளை உருவாக்க பாதுகாப்பு அமைச்சகத்துடன் சர்வம் ஏ.ஐ. நிறுவனம் 5 ஆண்டு கால ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.

8. காமன்வெல்த் கபடி சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர், ஆடவர் என இரு பிரிவுகளிலும் மெய்டன் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது இந்தியா.

9. உலக கால்பந்து வரலாற்றிலேயே 1,000 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை எட்ட நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு வெறும் 15 கோல்களே இந்த தேவைப்படுகின்றன. கோல்கள் கிளப் மற்றும் தேசிய அணிக்காக அடித்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

10. டீசல் மற்றும் விமான எரிபொருள் (ஏடிஎஃப்) ஏற்றுமதி மீதான எதிர்பாராத ஆதாய வரியை (விண்ட்ஃபால் வரி) மத்திய அரசு உயர்த்தியது.

i. அதேநேரம், பெட்ரோல் ஏற்றுமதி மீதான எதிர்பாராத ஆதாய வரியை அக்டோபர் 31- ஆம் தேதிமுதல் 15 நாள்களுக்கு முழுமையாக ரத்து செய்துள்ளது.

ii. மேற்காசிய போரால் ஏற்படும் பதற்றத்தால், உள்நாட்டில் தட்டுப்பாடு ஏற்படாததை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் சனிக் கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் கூறியி ருப்பதாவது:

- டீசல் ஏற்றுமதி மீது தற்போது லிட்டருக்கு ரூ.8.50 என்ற விகிதத்தில் விதிக்கப்படும் சாலை மற்றும் உள்கட்டமைப்பு செஸ் வரியுடன் கூடிய சிறப்பு கூடுதல் கலால் வரி, ரூ.11.50-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஏடிஎஃப் ஏற்றுமதி மீதான இந்த வரி தற்போதைய லிட்டருக்கு ரூ.10.50 என்ற நிலையிலிருந்து ரூ.11-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- அதே நேரம், பெட்ரோல் மீது தற்போது லிட்டருக்கு ரூ.2.50 வீதம் விதிக்கப்படும் எதிர்பாராத ஆதாய வரி, 15 நாள்களுக்கு முழுமையாக ரத்து செய்யப்படுகிறது. இந்தப் புதிய வரி நடைமுறை அக்டோபர் 31-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரும்.
- மேற்காசிய போர்ப் பதற்றத்துக்கு இடையே, டீசல் மற்றும் ஏடிஎஃப் மீது கடந்த மார்ச் 27-ஆம் தேதி ஏற்றுமதி வரியை விதித்த மத்திய அரசு, ஒவ்வொரு

15 நாள்களுக்கும் அதை மாற்றியமைத்து வருகிறது.

- அதே நேரம், உள்ளூர் நுகர்வுக்கான பெட்ரோல், டீசல் மீது தற்போது விதிக்கப்படும் வரி விகிதங்களில் எந்தவித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

11. நாட்டின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபபாய் படேலின் 151- ஆவது பிறந்த தினத்தையொட்டி, குஜராத்தின் ஏக்தா நகரில் உள்ள அவரது பிரம்மாண்ட சிலைக்கு பிரதமர் நரேந்திர மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

i. குஜராத்தின் ஏக்தா நகரில் உள்ள சர்தார் படேலின் 597 அடி உயர சிலைக்கு (ஒற்றுமை சிலை) பிரதமர் மோடி புனித நீர் ஊற்றியும், மலர்கள் தூவியும் மரியாதை செலுத்தினார். உலகின் மிகப் பெரிய சிலை என்ற பெருமைக்குரிய இந்தச் சிலை, நாட்டின் மிகப்பெரிய சுற்றுலாத் தலமாக உருவெடுத்துள்ளது. இந்தச் சிலை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகப்பு விளக்குகள் உள்பட பல்வேறு காட்சி அம்சங்களையும் பிரதமர் பார்வையிட்டார்.

12. நவீன இந்தியாவின் முதன்மை சிற்பியாகவும், சுதந்திர போராட்டத்தில் முன்னணி வீரராகவும் சர்தார் வல்லபபாய் படேல் ஆற்றிய பங்களிப்பை நாடு மறக்க முடியாது என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரி வித்துள்ளார்.

i. சுதந்திர இந்தியாவின் முதல் துணை பிரதமராகவும் முதல் மத்திய உள்துறை அமைச்சராகவும் பதவி வகித்த சர்தார் வல்லபபாய் படேல், 560-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை இந்திய ஒன்றியத்துடன் இணைத்த பெருமைக்குரியவர். நாட்டை ஒருங்கிணைக்க அவர் எடுத்த நடவடிக்கைகளை வைத்து 'இரும்பு மனிதர்' என்று அழைக்கப்படுகிறார். குஜராத் மாநிலம், நடியாத்தில் கடந்த 1875- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31- ஆம் தேதி அவர் பிறந்தார். அவரின் பிறந்த தினமான அக்டோபர் 31-ஆம் தேதி, ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கொண்டாடப்படுகிறது.

13. வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம் மூலம் 100 சதவீதம் மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்க நிர்வாக மற்றும் நிதி

ஒப்பளிப்பு செய்து, தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இது குறித்து நிர்வாக மற்றும் நிதி துறை சார்பில் சனிக்கி ழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

- கிராமப்புற மேம்பாடு, ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கும் வேளாண் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கமாக கால்நடை பராமரிப்புத் துறை விளங்குகிறது.
- நிகழாண்டில் ஊரகப் பகுதிகளில் வாழும் நலிவடைந்த கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், திருநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டத்தின்' கீழ் 100 சதவீதம் மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும். இதன்மூலம் சுமார் 30,000 பேர் பயனடைவர் என அறிவிக்கப்பட்டது.
- இதையடுத்து 2026-2027-ஆம் நிதியாண்டு ரூ.109.75 கோடி நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் நலிவடைந்தவர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைவதுடன், கிராமப்புற பொருளாதாரம் சிறக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14. இந்திய விமானப் படையின் 29-ஆவது தலைமைத் தளபதியாக ஏர் மார்ஷல் ஆசுதோஷ் தீட்சித் பதவியேற்றார்.

i. 1966-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி பிறந்த இவர், இந்திய விமானப் படையின் போர் விமானப் பிரிவில் கடந்த 1986-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் தேதி பணியில் சேர்ந்தார். தேசிய ராணுவ அகாதெமி, வங்கதேசத்தில் உள்ள ராணுவ அலுவலர்கள் கல்லூரி மற்றும் தேசிய ராணுவக் கல்லூரிகளின் முன்னாள் மாணவராவார்.

ii. விமானப் படையில் 40 ஆண்டுகள் பணி அனுபவம் கொண்ட இவர், முப்படை தளபதிகள் குழுவின் தலைவருக்கான ஒருங்கிணைந்த பாதுகாப்புப் படைத் தலைவராகவும், விமானப் படை துணைத் தளபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

15. மேகதாட்டு திட்டத்துக்காக 2,500 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது

(i) திட்டத்தின் விவரங்கள் மற்றும் மின் உற்பத்தித் திறன்

- கர்நாடக மாநிலம், ராமநகரா மாவட்டத்தின் கனகபுரா வட்டத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாட்டு அணைத் திட்டம் அமைக்கத்

திட்டமிடப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 66 டிஎம்சி (TMC — ஆயிரம் மில்லியன் கன அடி) நீரைச் சேமிக்க முடியும்.
- இத்திட்டத்தில் 400 மெகாவாட் (MW) நீர்மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- பெங்களூரு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் குடிநீர்த் தேவைக்காக 4.75 டிஎம்சி தண்ணீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- குறிப்பாக, நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் காலங்களில், தமிழகத்துக்குத் தேவையான ஆண்டுதோறும் 177 டிஎம்சி காவிரி நீரை கீழ்நோக்கி வெளியேற்றுவதை ஒழுங்குபடுத்தி, சீரான நீரோட்டத்தை உறுதிசெய்வதே இத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது.

(ii) நிலத் தேவை மற்றும் சுற்றுச்சூழல் அனுமதிகள்

- திட்டத்துக்குத் தேவையான நிலத்துக்கு மாற்றாக வழங்குவதற்காக, வனப்பகுதிகள் உள்ளிட்ட 2,500 ஏக்கர் மாற்று நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் தேவையான எஞ்சிய நிலங்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.
- மாற்று நிலங்களை ஒப்படைக்கும் செயல்முறையைக் கண்காணிக்கும் குழுவின் தலைவராக மாண்டியா மாவட்ட ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- விவசாயிகளிடமிருந்து நேரடியாகச் சுமார் 500 ஏக்கர் தனியார் நிலம் மட்டுமே கையகப்படுத்த வேண்டியிருக்கும். இதற்கான நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவில் தொடங்கும்.
- தேவையான வன அனுமதிகளைப் பெறுவதற்காக, நில ஆவணங்கள் மற்றும் மாற்று நிலம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

(iii) சட்ட அனுமதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான நிலைப்பாடுகள்

- கர்நாடகத் துணை முதலமைச்சர் டி. கே. சிவகுமார், மேகதாட்டு திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பிரமாணப் பத்திரங்களை மாநில அரசு தாக்கல் செய்துள்ளதாகவும், சட்டப் போராட்டத்தில் வெற்றி பெற்று, திட்டத்தைச் செயல்படுத்த உச்சநீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.
- இத்திட்டம் தொடக்கத்திலிருந்தே தமிழக அரசின் எதிர்ப்பைச் சந்தித்து வருகிறது. அதேவேளையில், கர்நாடக அரசு இத்திட்டத்தைச்

செயல்படுத்துவதில் தீவிரமாக உள்ளது.

- மத்திய அமைச்சருடன் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும், பாஜக தலைவர்களின் ஆதரவைக் கோர உள்ளதாகவும் சிவகுமார் குறிப்பிட்டார்.
- அடுத்த மாநில பட்ஜெட்டுக்கு முன்பாக இத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் எனவும் அவர் எதிர்பார்ப்பு தெரிவித்தார்.

(iv) விவசாயம் மற்றும் பிராந்தியப் பாதிப்புகள்

- உபரி நீரைச் சேமித்து, நீர்ப்பற்றாக்குறை காலங்களில் கட்டுப்பாட்டுடன் வெளியேற்றுவதன் மூலம் மாண்டியா மாவட்டம், ஹேமாவதி ஆற்றுப் படுகை மற்றும் காவிரி பாசனப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் நேரடியாகப் பயனடைவார்கள் எனக் கூறப்படுகிறது.

16. நடப்பு நிதியாண்டில் மேலும் ஆறு விண்வெளி ஏவுதல்கள் இலக்கு: இஸ்ரோ தலைவர் வி. நாராயணன்

(i) NVS-03 செயற்கைக்கோளின் வெற்றிகரமான ஏவுதல் மற்றும் நாவிக் (NaVIC) சேவைகள் மீட்பு

- ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்திலிருந்து வெள்ளிக்கிழமை, GSLV-F18 ராக்கெட் மூலம் NVS-03 (IRNSS-1L) செயற்கைக்கோளை இஸ்ரோ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- செயற்கைக்கோள், அதற்கெனத் திட்டமிடப்பட்ட சுற்றுப்பாதையில் துல்லியமாக நிலைநிறுத்தப்பட்டது.
- ஏற்கெனவே சுற்றுப்பாதையில் செயல்பாட்டில் உள்ள மூன்று வழிகாட்டி செயற்கைக்கோள்களுடன் NVS-03 இணைந்ததன் மூலம், நான்காவது செயல்பாட்டு செயற்கைக்கோளாக மாறியுள்ளது.
- இருப்பிடம் கண்டறிதல், வழிகாட்டுதல் மற்றும் நேரக் கணிப்பு (Positioning, Navigation and Timing — PNT) சேவைகளை வழங்குவதற்கு குறைந்தபட்சம் நான்கு செயற்கைக்கோள்கள் சுற்றுப்பாதையில் தேவைப்படுவதால், இந்த ஏவுதலின் மூலம் இந்தியாவின் நாவிக் (NaVIC) சேவைகள் முழுமையாக மீட்டெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ii) நாவிக் பயன்பாடுகள், பாதுகாப்பு மற்றும் விரிவாக்க இலக்குகள்

- நாவிக் வழிகாட்டுதல் அமைப்பு, இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மிகவும் முக்கியமானதாகும்.

- தற்போது, 10,400-க்கும் மேற்பட்ட ரயில் என்ஜின்கள் மற்றும் 64,000 மீன்பிடிப் படகுகளின் நிகழ்நேர இருப்பிடக் கண்காணிப்பை நாவிக் வழங்குகிறது.
- அடுத்த ஆறு மாதங்களுக்குள் மீன்பிடிப் படகுகளின் கண்காணிப்பு எண்ணிக்கையை 1,00,000-ஆக உயர்த்த இஸ்ரோ இலக்கு நிர்ணயித்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள வாகனங்களில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட கண்காணிப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.
- இந்தியா முழுவதும் மட்டுமின்றி, நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் சுமார் 1,500 கி.மீ. தொலைவு வரையிலும் வழிகாட்டுதல் சேவைகளை வழங்கும் வகையில் நாவிக் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- நாவிக் சேவையை மொபைல் போன்களில் பயன்படுத்துவதற்கு, திட்டமிடப்பட்டுள்ள ஏழு செயற்கைக்கோள்களைக் கொண்ட அடிப்படைத் தொகுப்பை (constellation) முழுமையாகச் செயல்படுத்துவது அவசியமாகும்.
- இந்த இலக்கு நிறைவேறிய பின்னர், நாவிக் சேவையை உலகளாவிய அளவில் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மதிப்பீடு செய்யப்படும்.

(iii) தொழில்நுட்பத் திருத்தங்கள் மற்றும் வால்வு அமைப்பில் மாற்றங்கள்

- முந்தைய NVS-02 செயற்கைக்கோள் ஏவுதலின்போது, வெடிப்புச் செயல்பாட்டால் இயங்கும் பைரோ வால்வுகளில் (Pyro valves) ஏற்பட்ட தொழில்நுட்பச் சிக்கல்களைத் தொடர்ந்து, இஸ்ரோ தனது வடிவமைப்பு அணுகுமுறையில் மாற்றங்களைச் செய்தது.
- NVS-03 செயற்கைக்கோளில், மூன்று பைரோ வால்வுகளையும் திறந்த நிலையில் வைத்துவிட்டு, சோலினாய்டு வால்வுகளை (Solenoid valves) மட்டுமே நம்பிச் செயல்படும் வகையில் பொறியாளர்கள் மாற்றம் செய்தனர்.
- முந்தைய 37 விண்வெளிப் பயணங்களின் தரவுகள், சோலினாய்டு வால்வுகள் கசிவின்றிச் செயல்பட்டதை உறுதிப்படுத்தின.
- அதிர்வு மற்றும் அதிர்ச்சித் தாங்குதிறன் சோதனைகளுக்குப் பிறகு, இந்த மாற்றம் இறுதி செய்யப்பட்டது.
- செயற்கைக்கோளின் உந்துவிசைக் கருவிகள் (Thrusters) செயல்பாட்டில் உள்ளன. மேலும், செயற்கைக்கோளில் உள்ள அனைத்து அமைப்புகளும் சீராக இயங்கி வருகின்றன.

(iv) 2026–2027 நிதியாண்டிற்கான விண்வெளித் திட்டப் பாதை

- 2026–2027 நிதியாண்டில் ஆறு விண்வெளி ஏவுதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் அறிவித்தார்.

- திட்டமிடப்பட்டுள்ள ஏவுதல்கள்:
- இரண்டு PSLV ஏவுதல்கள்.
- ஒரு GSLV ஏவுதல்
- ஒரு SSLV ஏவுதல்.
- G1 விண்வெளிப் பயணம்
- ஒரு தனியார் விண்வெளி ஏவுதல்.
- NVS-04 மற்றும் NVS-05 செயற்கைக்கோள்கள் ஐந்து மாத இடைவெளியில் விண்ணில் செலுத்தப்படும்.
- முந்தைய NVS-02 செயற்கைக்கோளுக்கு மாற்றாக மற்றொரு செயற்கைக்கோளையும் விண்ணில் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) ககன்யான் மனித விண்வெளிப் பயணத் திட்டத்தின் முன்னேற்றம்

- இந்தியாவின் ககன்யான் மனித விண்வெளிப் பயணத் திட்டத்தின் கீழ் 8,000-க்கும் மேற்பட்ட சோதனைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கு முன்பாக, மூன்று ஆளில்லா விண்வெளிப் பயணங்களை இஸ்ரோ மேற்கொள்ளும்.
- முதல் ஆளில்லா விண்வெளிப் பயணத்திற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.